# கீழக்கரை நகர்மன்ற 12.05.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020–21 (Tied Grant to Non Million Plus Cities)-ன்கீழ் கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16–ல் அமைந்துள்ள கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் புதிதாக 1 எண்ணம் 5HP மின் மோட்டார் & பம்ப் மற்றும் 1 எண்ணம் 16A ஸ்டார்ட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.65,000/–க்கு (திட்டநிதி ரூ.50,000 + வருவாய் நிதி ரூ.15,000) மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 29.01.2021–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மின்மோட்டார், பம்ப் மற்றும் ஸ்டார்ட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 25.02.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் (Tied Grant to Non Million Plus Cities) 2020–2021** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக் குட்பட்ட வார்டு எண்.16–ல் அமைந்துள்ள கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் மின் மோட்டார், பம்ப் (Motors & Pump) மற்றும் ஸ்டார்ட்டர் புதிதாக விநியோகம் செய்யும் பணி.<br>1) 5HP மின் மோட்டார் & பம்ப் – 1 எண்ணம்<br>2)16A ஸ்டார்ட்டர் –1 எண்ணம் | 0.65 | எம். கஜேந்திரன்,<br>21/33, தட்டான்தோப்பு தெரு,<br>கீழக்கரை. | ரூ.62,555/– மதிப்பீட்டு தொகையை விட 0.03% குறைவு |
| | | | ஸ்ரீ மங்களம் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>2/71–A முத்துச்சாமிபுரம்,<br>கீழக்கரை | ரூ.62,606/– மதிப்பீட்டு தொகையை விட 0.05% அதிகம் |

**(கோப்பு எண். 610/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எம். கஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.844 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் (Tied Grant to Non Million Plus Cities) 2020–21ன் கீழ் இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் ரூ. 6,25,000/– மதிப்பீட்டில் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.25160/2020/பி4, நாள்.29.01.2021–ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகர்மன்றத்தில் 29.01.2021–ந் தேதி அனுமதி பெறப்பட்டு, இப்பணிக்கு 25.02.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் (Tied Grant to Non Million Plus Cities) 2020–2021** | | | | |
| 1. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல் (Light Commercial Vehicle 4 Wheeler Tipper Auto). | 6.25 | ஸ்ரீ சாய் இண்டஸ்ட்ரிஸ், T–382, காட்டூர், திருமுல்லைவாயில், சென்னை. | ரூ.6,21,488/– மதிப்பீட்டு தொகையைவிட 0.02% குறைவு |
| | | | லெட்சுமி எண்டர்பிரைசஸ், 20/23ஏ, கதவு எண் டி , சாந்தி பிளாட், திருவான்மியூர், சென்னை. | ரூ.6,22,720/– மதிப்பீட்டு தொகையைவிட 0.18% அதிகம் |

**<u>(கோப்பு எண். 610/2020/இ1)</u>**
**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ஸ்ரீசாய் இன்டஸ்ட்ரிஸ் சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.845 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :3

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் தற்போது பரவி வரும் மிககொடிய இரண்டாம் அலை வைரஸ் கிருமியான கொரானோ வைரஸிலிருந்து பொதுமக்களை காத்திடவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை எண் _342 நாள் 08.04.2021–ன் படியும் மற்றும் மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண் சி2/12822/2020 நாள் 19.04.2021 –ன் படியும் அந்தந்த நகராட்சி நிர்வாகம் அலுவலகம் மூலம் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட தெருவின் உள்ள நபர்களின் வசிப்பீடங்களை தனிமைபடுத்தி கம்புவைத்து அடைப்பதற்காக அதற்கான உத்தேச செலவீனம் ரூ 5,00,000/– ஆகும் எனவும் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையை ஏற்று இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 136/2021/எச்1)**

**அலுவலக குறிப்பு**

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட தெருவின் உள்ள நபர்களின் வசிப்பீடங்களை தனிமைபடுத்தி கம்புவைத்து அடைப்பதற்காக உத்தேச செலவீனம் ரூ 5,00,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.846அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :4

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் தற்போது பரவி வரும் மிககொடிய இரண்டாம் அலை வைரஸ் கிருமியான கொரானோ வைரஸிலிருந்து பொதுமக்களை காத்திடவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை எண் 342 நாள் 08.04.2021–ன் படியும் மற்றும் மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண் சி2/12822/2020 நாள் 19.04.2021 –ன் படியும் அந்தந்த நகராட்சி நிர்வாகம் அலுவலகம் மூலம் பொதுமக்கள் கூடும் இடஙகளை தீவிரமாக கண்காணித்து கிருமி நாசினி பொருட்கள் தெளித்து வைரஸ் கிருமி பரவாமல் தடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் படி மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 20,00,000/– ஆகும் எனவும் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையை ஏற்று இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 136/2021/எச்1)**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 20,00,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.847 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :5

கீழக்கரை நகராட்சி 2020—2021—ம் நிதியாண்டிற்கான இவ்வலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, பணியாளர்களுக்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், ரசீது புத்தகங்கள், வெள்ளை தாள்கள் போன்ற பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/—ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 510/சி2/2017)**

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. உத்தேச செலவினத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.848 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :6**

கீழக்கரை நகராட்சி 2020–2021–ம் நிதியாண்டிற்கான இவ்வலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, பணியாளர்களுக்கு தேவையான கணினி உபகரணங்கள், டோனர், கீபோர்டு, மவுஸ் போன்ற பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.510/சி2/2017)**

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. உத்தேச செலவினத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.849 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :7**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரையிலான சொத்து வரி காலிமனை வரி , தொழில் வரி , குடிநீர் கட்டணம் , குத்தகை , கட்டணம் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க கட்டணம் ஆகிய இனங்களில் வரி விதிக்கப்பட்ட வரி விதிப்புதாரர்களின் ஆங்கிலப் பெயருக்கு இணையான தமிழ்ப் பெயர்களை (urban tree software) என்ற மென்பொருளில் (tamil updation) உள்ளீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்படி பணிகளை 14.05.2021–ஆம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் (ந.க.எண்.49/2016/பி3 நாள்.07.05.2021) கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.தற்போது இந்நகராட்சி வருவாய் பிரிவிற்கு கணிப்பொறி ஏதும் இல்லாத காரணத்தினால் மேற்படி பணிகளை செய்வதற்கு காலதாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக இவ்வலுவலக வருவாய் உதவியாளர்களால் தெரிவிக்கப்பட்டது.எனவே மேற்படி பணிகளை விரைவாக முடிக்கும் பொருட்டு அவசர தேவை என கருதி இந்நகராட்சி வருவாய் பிரிவிற்கு இரண்டு மேஜை கணிப்பொறி (desktop computer) மற்றும் ஒரு பிரிண்டர் (printer) கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய இந்நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.271/2021/அ1)**

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.இந்நகராட்சி வருவாய் உதவியாளர்களின் குறிப்பின்படி இவ்வலுவலக வருவாய் பிரிவிற்கு இரண்டு மேஜை கணிப்பொறி மற்றும் ஒரு பிரிண்டர் ஆகிய பொருட்களை கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

3.அவசர தேவையின் காரணமாக மேற்க்கண்ட பொருட்களை கூட்டுறவு நிறுவனம் மூலம் கெள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4.இதற்கு ஆகும் செலவீனஙகளை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.850 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :8</u>**

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பூங்கா, திறவிடம், குடிநீர் தொட்டி, உரக்கிடங்கு, நீர் ஏற்று நிலையம் மற்றும் பேருந்து நிலையம் அமைந்துள்ள இடங்களில் நகராட்சி சார்பில் சர்வே எண், வருவாய் கிராமம் மற்றும் நில உரிமம் குறித்த நகராட்சி விவரங்கள் அடங்கிய பெயர் பலகை மற்றும் நகராட்சி எல்லைப் பகுதியில் பெயர் பலகை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள 31.03.2021–ந் தேதி இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரால் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நகராட்சிப் பொறியாளரின் 01.04.2021–ந் தேதிய அறிக்கை மற்றும் ஆணையாளர் அவர்களின் 08.04.2021–ந் தேதிய உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தலுக்கான நன்னடத்தை விதி (Model Code of Conduct) 26.02.2021 முதல் நடைமுறைக்கு வந்ததால் பணிகள் ஏதும் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. 04.05.2021–ந் தேதி முதல் தேர்தல் நடைமுறைகள் முடிவுற்றதால், மேற்காணும் இந்நகராட்சிக்கு சொந்தமான இடங்களில், சமூக விரோதிகளின் ஆக்கிரமிப்பினை தடுக்கவும், நகராட்சியின் சொத்தினை பாதுகாக்கவும், இந்நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் இடங்களில் பெயர்பலகை அமைப்பதற்கு ரூ. 6,00,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. இந்நகராட்சி பூங்காக்கள் | – | 4 எண்ணம் |
| 2. இந்நகராட்சி குடிநீர் மேல்நிலைத் தொட்டி | – | 1 எண்ணம் |
| 3. இந்நகராட்சி மாலாங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையம் | – | 1 எண்ணம் |
| 4. இந்நகராட்சி சேதுக்கரை குடிநீர் ஏற்றும் நிலையம் | – | 2 எண்ணம் |
| 5. இந்நகராட்சி பழைய மற்றும் புதிய உரக்கிடங்குகள் | – | 2 எண்ணம். |
| 6. பேருந்து நிலையம் | – | 1 எண்ணம். |
| 7. வடக்குத்தெரு டிரக் கொட்டகை | – | 1 எண்ணம் |
| 8. மாரியம்மன் கோவில் அருகில் | – | 1 எண்ணம் |
| 9. இந்து மயானம் | – | 1 எண்ணம் |
| 10. இந்து மயானம் ஊரணி | – | 1 எண்ணம் |

11. முத்துச்சாமிபுரம் ஊரணி – 1 எண்ணம்
12. பெத்திரி தெரு – 2 எண்ணம்
13. மேலத்தெரு வளாகம் – 1 எண்ணம்
14. கழிவு நீர் ஏற்று நிலையங்கள் – 5 எண்ணம்

மேற்காணும் பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு, இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 198/2021/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகராட்சியின் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு, இந்நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் பெயர் பலகை வைப்பதற்கு பொறியாளர்களால் ரூ.6,00,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.851அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :9**

வடகிழக்கு பருவமழை 2020 – தமிழகத்தில் வங்கக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புரெவி புயலாக உருவாகி 02.12.2020 முதல் 05.12.2020–ந் தேதி வரை பெய்த கடும் மழையின் காரணமாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21976/2020/இ2, நாள். 05.03.2021–ன்படி, இந்நகராட்சிக்கு ரூ.2,50,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தலுக்கான நன்னடத்தை விதி (Model Code of Conduct) 26.02.2021 முதல் நடைமுறைக்கு வந்ததால் பணிகள் ஏதும் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. 04.05.2021–ந் தேதி முதல் தேர்தல் நடைமுறைகள் முடிவுற்றதால், இந்நகராட்சிப் பொறியாளர் 15.03.2021–ந் தேதிய அறிக்கை மற்றும் ஆணையாளர் அவர்களின் 18.03.2021–ந் தேதிய உத்தரவின்படி, இயற்கை இடர்பாடுகள்– புரெவி புயல் 2020ல் பாதிக்கப்பட்ட இடங்களை மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதான தார்ச்சாலைகளை மறு சீரமைப்பு செய்வதற்கு ரூ.2,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகள் செய்வதற்கு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 182/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு:**

1) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21976/2020/இ2, நாள். 05.03.2021ன்படி ரூ.2,50,000/– நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.
2) இயற்கை இடர்பாடுகள் – புரெவி புயல் காரணமாக இந்நகராட்சிப் பகுதிகளில்கடும் மழையின் காரணமாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தார்ச்சாலைகளை மறு சீரமைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3) சாலைகள் மறு சீரமைப்பு பணிகள் செய்ய பொறியாளர்களால் ரூ.2,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.852அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :10**

இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 11 வரையிலான பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் மூலம் 25 பணியாளர்களை கொண்டு முதல்நிலை திடக்கழிவு குப்பைகளை சேகரிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 6011/பி3/2017 நாள் 15.06.2017–ன் படி அனுமதி வழுங்கப்பட்டு M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு,கோரிப்பாளயம்,மதுரை-2. ஒப்பந்த அடிப்படையில் பணி உத்திரவு வழங்கப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் 11.11.2020 வுடன் ஒப்பந்தம் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி 14.06.2020–ந் தேதியுடன் முடிவடைந்தால் மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் உத்திரவினை எதிர்நோக்கி 12.02.2021 முதல் 11.05.2021 வரை 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கும் உத்திரவு நிலுவையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை மேற்கொள்ள உரிய காலம் இல்லாததாலும் M/S.Exsernet. S.M.M.காம்ளாக்ஸ், கல்பாலம் ரோடு, கோரிப்பாளயம்,மதுரை-2. நிறுவனத்திற்கு 12.05.2021 முதல் 11.07.2021 வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும் அதற்கான ஊதியம் வழங்க ரூ 12,00,000/– லட்சத்திற்கு அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(எச்1 /1528/2012)

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார நலன் அவசர அவசியம் கருதி வார்டு 1 முதல் 11 வரையிலான பகுதிகளில் தனியார் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்தில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்க அனுமதிக்கும் உத்திரவு நிலுவையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை மேற்கொள்ள உரிய காலம் இல்லாததாலும் பொதுசுகாதார நலன் கருதி 3 மாதங்களுக்கு பணிநீடிப்பு செய்யவும் அதற்கான செலவினங்களை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.853அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :11</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு கழிவுநீர் வாகனம் **TN65 Q 9563** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் 1. டிங்கரிங் வேலை பெயிண்டிங், 2.10 அடி ஓஸ் – 5 எண்ணம் 3. கேட்வால்வு 4. வீல்பேரிங் 5. கம்ப்ரஸர் மோட்டார் பழுது 6. கியர்பாக்ஸ் கம்ப்ரஸர் பெல்ட் 7. டோர் மற்றும் சீட் பழுது 8. புதிய டையர் 6–எண்ணம் 9. இன்ஜின் ஆயில் 10. கியர் ஆயில், கிரவுன் ஆயில் மற்றும் ஆயில் பில்டர், டீசல் பில்டர், கிளெட்ச் பிளேட், கம்ப்ரஸர் மோட்டார் லிவர், செல்ப் மோட்டார், டைனமோ ,கண்ணாடி, பேட்டரி மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு ஓட்டுநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் வாகனத்தை பழுது நீக்கம் செய்து இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,70,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின் அவசரம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. உத்தேச செலவீனம் ரூ.1,70,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கழிவுநீர் வாகனம் **TN65 Q 9563** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் பழுதுநீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.854அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :12</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு பொதுசுகாதார பிரிவு கழிவுநீர் வாகனம் **TN65 Q 9563** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் 1. டிங்கரிங் வேலை பெயிண்டிங், 2.10 அடி ஒஸ் – 5 எண்ணம் 3. கேட்வால்வு 4. வீல்பேரிங் 5. கம்ப்ரஸர் மோட்டார் பழுது 6. கியர்பாக்ஸ் கம்ப்ரஸர் பெல்ட் 7. டோர் மற்றும் சீட் பழுது 8. புதிய டையர் 6–எண்ணம் 9. இன்ஜின் ஆயில் 10. கியர் ஆயில், கிரவுன் ஆயில் மற்றும் ஆயில் பில்டர், டீசல் பில்டர், கிளெட்ச் பிளேட், கம்ப்ரஸர் மோட்டார் லிவர், செல்ப் மோட்டார், டைனமோ ,கண்ணாடி, பேட்டரி மற்றும் இதர பழுதுகள் சரிசெய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 1.70 –லட்சத்திற்கு இந்நகர் மன்ற கூட்ட நடவடிக்கையின் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 11.05.2021–ம் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | JP ஆட்டோ ஒர்க்ஸ், மற்றும் டிரான்போர்ட் சர்வீஸ்<br>3/24 கிழக்கு தெரு பேராவூர்,<br>இராமநாதபுரம் | ரூ.1,52,640/–<br>(CGST & SGST உட்பட) |
| 2 | ஸ்ரீ முருகன் மோட்டார் சர்வீஸ்,<br>எண் 78 அன்புநகர், மதுரை ரோடு<br>இராமநாதபுரம் | ரூ.1,56,070/–<br>(CGST & SGST உட்பட) |
| 3 | RST ஆட்டோ கேரேஜ்,<br>எண் 27 ஈஸா பள்ளிவாசல்தெரு, நஜிமா மஹால் எதிரில்<br>இராமநாதபுரம் | ரூ.1,58,042/–<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண்.137/2021/எச்1)**

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு கழிவுநீர் வாகனம் **TN65 Q 9563** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்து தருவதற்கு மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட ரூ 1,52,640/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள JP ஆட்டோ ஒர்க்ஸ், மற்றும் டிரான்போர்ட் சர்வீஸ் பேராவூர், இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.855அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :13

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு உழுவை வாகனம் TDR 4355 –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் 1. டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் வேலை 2. புதிய டிரைலர் 3. வீல்பேரிங் 4. இன்ஜின் ஆயில் 5. கியர் ஆயில் 6. புதிய ரேடியேட்டர் 7. பேட்டரி புதியது 8. செல்ப் மோட்டார், டைனமோ புதியது 9. புதிய டையர் 6–எண்ணம் 10. வீல் டிஸ்க் டாப் 11. தார்பாய் 12. இன்ஜின் மூன்கவர் 13. டிரைலர் ஒஸ் ,14. டிரைலர் சீட் 15.வீல் பிரேக் செக்கப் 16. டீசல் டேங்க் மூடி மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு ஓட்டுநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் வாகனத்தை பழுது நீக்கம் செய்து இராமநாதபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,60,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொதுசுகாதார பணியின் அவசரம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று மேற்காணும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. உத்தேச செலவீனம் ரூ.1,60,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உழுவை வாகனம் TDR 4355 –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் பழுதுநீக்கம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.856அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :14

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு உழுவை வாகனம் TDR 4355 –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் 1. டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் வேலை 2. புதிய டிரைலர் 3. வீல்பேரிங் 4. இன்ஜின் ஆயில் 5. கியர் ஆயில் 6. புதிய ரேடியேட்டர் 7. பேட்டரி புதியது 8. செல்ப் மோட்டார், டைனமோ புதியது 9. புதிய டையர் 6–எண்ணம் 10. வீல் டிஸ்க் டாப் 11. தார்பாய் 12.இன்ஜின்மூன்கவர் 13. டிரைலர் ஒஸ் ,14. டிரைலர் சீட் 15. வீல் பிரேக் செக்கப் 16. டீசல் டேங்க் மூடி மற்றும் இதர பழுதுகள் சரிசெய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 1.60–லட்சத்திற்கு இந்நகர் மன்ற கூட்ட நடவடிக்கையின் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 11.05.2021–ம் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | JP ஆட்டோ ஒர்க்ஸ், மற்றும் டிரான்போர்ட் சர்வீஸ்<br>3/24 கிழக்கு தெரு பேராவூர்,<br>இராமநாதபுரம் | ரூ.1,47,170/–<br>(CGST & SGST உட்பட) |
| 3 | மகேந்திரன்டிராக்டர் ஒர்க்ஸ்,<br>இராமநாதபுரம் ரோடு<br>கீழக்கரை | ரூ.1,53,920/–<br>(CGST & SGST உட்பட) |
| 2 | மீனாட்சி சுந்தரம் ஆட்டோ மொபைல்ஸ்,<br>மீனாட்சி மரைன் ஸ்பேர்ஸ்<br>எண் 177ஏ வடக்கு வெளி வீதி<br>மதுரை | ரூ.1,59,002/–<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண்.138/2021/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு உழுவை வாகனம் **TDR 4355** –ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்து தருவதற்கு மேற்கண்ட விலைப்புள்ளிகளில் பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட ரூ 1,47,170/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள JP ஆட்டோ ஒர்க்ஸ், மற்றும் டிரான்போர்ட் சர்வீஸ் பேராவூர், இராமநாதபுரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.857அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :15**

இந்நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் 2 பிரண்ட் வீல் பிங்க் ரோட்டர், பிரேக் பேட் செட், பிரண்ட் வீல் இன்னர் பேரிங், அவுட்டர் பேரிங், பிரண்ட் வீல் ஆயில் சீல், 1/2 லிட்டர் பிரேக் ஆயில், லாக் வாசர், 1/2 கிலோ கிரீஸ், வேஸ்ட் பழுதடைந்துள்ளதை சரி செய்து தருமாறு 11.05.2021–ந் தேதி இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநரால் (பொ) அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு, இந்நகராட்சிப் பொறியாளரால் 12.05.2021–ந் தேதி அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 267/2021/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. தற்போது கோவிட்–19 விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ளதாலும், கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வாகனத்தின் அவசிய அவசரத்தினை கருதி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.858அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :16</u>**

கீழக்கரை நகராட்சியில் தினமும் சேகாரமாகும் குப்பை கூளங்களை இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ள மோர்க்குளம் கிராமத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் கொட்டப்பட்டு அவற்றை பயோமைனிங் முறையில் பிரித்து உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில் புதிதாக கொட்டப்படும் குப்பை கழிவுகளை வேறு இடம் தேர்வு செய்து கொட்டுமாறு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நேரடி ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி உரக்கிடங்கில் தினசரி சேகாரமாகும் புதிய குப்பை கழிவுகளை நகராட்சி உரக்கிடங்கின் கடைசி பகுதியில் கொட்டும் வகையில் அப்பகுதியில் குவிந்துள்ள குப்பை கூளங்களை சமப்படுத்துவதற்கும் ஜே.சி.பி.இயந்திரம் முலம் உரக்கிடங்கை சீரமைக்கவும் தேவைக்கேற்ப ஜே.சி.பி இயந்திரத்தினை அவ்வப்போது பயன்படுத்திக்கொள்ள 02.11.2020–ந் தேதிய கூட்ட நடவடிக்கையில் அனுமதி வழங்கப்பட்டு தற்போது வரை பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பொதுசுகாதார நலன் அவசர அவசியம் கருதி இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடஙகு பகுதியில் ஜே.சி.பி.இயந்திரம் மூலம் குப்பைகளை சமப்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் 5,00,000/– ஆகும் என இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(எச்1 /1036/2020)

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ 5,00,000/– மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.859அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :17</u>**

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள் செல்லும் வழியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் தொட்டிகள் மற்றும் அதன் மூடிகள் (Manhole Chamber and Cover Slab) பழுது ஏற்பட்டு, திறந்த நிலையில் உள்ளது. இந்நகர் பொதுமக்கள் மற்றும் பொதுநல அமைப்புகளின் கோரிக்கையின்படி, பொதுசுகாதார நலன் கருதி, சுகாதாரத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பொதுசுகாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் ரூ.90,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தலுக்கான நன்னடத்தை விதி (Model Code of Conduct) 26.02.2021 முதல் நடைமுறையில் இருப்பதால், இப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால், இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவர் மூலம் அவசர அவசியம் கருதி விதி எண்.15–ன் கீழ் பணி செய்வதற்கு பொறியாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ரூ.90,000/– மதிப்பீட்டிலான பணியை இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவர் மூலம் இந்நகராட்சி பொதுசுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொள்ள ஆணையாளரால் உத்திரவிடப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரரிடம் இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளரால் நேரடியாக அறிவுறுத்தியதன்படி, ரூ.90,000/– மதிப்பீட்டில் கண்டுள்ள பணியினை ஒப்படைப்பு பணியாக நகராட்சி சட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு நல்ல முறையில் செய்து கொடுப்பதற்கு ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரால் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் குழாய்கள் செல்லும் வழியில் அமைக்கப்பட்டு தற்போது பழுதான நிலையில் உள்ள கழிவுநீர் தொட்டிகள் பழுதுநீக்கம் மற்றும் அதன் மூடிகள் (Manhole Chamber and Cover Slab) அமைக்கும் பணிகள் ரூ.90,000/– மதிப்பீட்டில் ஒப்படைப்பு பணியாக விதி எண்.15–ன் கீழ் மேற்கொள்ள இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவருக்கு பணி மேற்கொள்ள 12.03.2021–ந் தேதி வழங்கப்பட்ட பணி உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண். 150/2021/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொதுசுகாதார நலன் கருதி ரூ.90,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 தேர்தலுக்கான நன்னடத்தை விதி (Model Code of Conduct) 26.02.2021 முதல் நடைமுறையில் இருந்ததால், பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.860 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :18

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பொதுமக்களுக்கும் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரங்களாக விளங்கும் சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையத்திலிருந்து, கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேட்டில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்களில் ஆங்காங்கே உடைந்து கசிவு ஏற்பட்டு குடிநீர் சாலையில் வெளியேறுகிறது. இதனால், பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதுடன், பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்து வண்ணம் உள்ளன. ஆகவே, பழுது ஏற்படும் குடிநீர் குழாய்களை உடனடியாக சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேலும், தற்போது கொரோனா ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் அதிர்ப்தி ஏற்படாதவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, குடிநீர் குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை உடனடியாக சரி செய்வதற்கு ரூ.3,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 270/2021/இ1)
அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் பொதுமக்களின் குடிநீரின் அவசியத்தை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.3,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.861அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :19

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் குழாய்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் தொட்டி மூடிகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதங்களாக சட்டமன்ற தேர்தல் விதி நடைமுறையில் இருந்ததால் கழிவுநீர் குழாய்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் தொட்டி மூடிகள் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு பணிகள் மேற்கொள்ள இயலாமல் கழிவுநீர் சாலைகள் மற்றும் தெருக்களில் செல்வதால் சுகாதார பாதிப்பு ஏற்பட்டு பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. ஆகவே, இப்பழுதுகளை பொதுமக்களின் நலன் கருதி உடனடியாக சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

ஆகவே, மேற்காணும் பழுதுநீக்கப் பணிகள் அனைத்தும் உடனடியாக செய்ய வேண்டிய சூழ்நிலையில், தற்போது தேர்தல் நடத்தை விதி நடைமுறையில் உள்ளது. ஓரிரு நாட்களில் தளர்வுகள் ஏற்பட உள்ளது. மேலும், தற்போது கொரோனா ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் அதிர்ப்தி ஏற்படாதவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, இந்நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள், மழைநீர் வடிகால் மற்றும் தொட்டி மூடிகள் பழுது நீக்கம் பணி செய்வதற்கு ரூ.4,80,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு, இந்நகராட்சி பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.269/2021/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.4,80,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.862அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :20</u>**

கீழக்கரை நகராட்சியின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட அறிக்கைகள் (Budget) கணினி மென்பொருளில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள வரவு, செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் 2020—2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.165/2021/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

2021-2022 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கைகள் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.863அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :21**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 முத்துச்சாமிபுரம், வார்டு எண்.5 புதுகிழக்குத் தெரு, வார்டு எண். 14 சின்ன கடைத்தெரு மற்றும் வார்டு எண்.19 வடக்குத் தெரு ஆகிய பகுதிகளில் கழிவுநீர் தொட்டிகள், அதன் மூடிகள் சேதடைந்துள்ளது மற்றும் கழிவுநீர் குழாய்கள் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் செல்வதால், பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, மேற்கண்ட இடங்களில் உள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் மூடிகளை சரி செய்வதற்கு, சுகாதார ஆய்வர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், உடனே பணி செய்ய வேண்டி இருப்பதாலும், மேலும், தற்போது கொரோனா ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் அதிர்ப்தி ஏற்படாதவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.4,50,000/—க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 268/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.4,50,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.864 அனுமதிக்கப்பட்டது.**

ஒம்/—எம். பூபதி,
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.